ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

विधेरज्ञानेन द्रविणविरहेणालसतया
विधेयाशक्यत्वात्तव चरणयोर्या च्युतिरभूत् ।
तदेतत्क्षन्तव्यं जननि सकलोद्धारिणि शिवे
कुपुत्रो जायेत क्वचिदपि कुमाता न भवति ॥

देवीस्तोत्रम् ॥

ஹே சிவே! பக்தர்களுக்கு க்ஷேமத்தைக் கொடுக்கும் சக்திவாய்ந்த பார்வதிதேவி! உன்னை உபாஸிக்கவேண்டிய முறையைக்கூறும் சாஸ்திரங்களில் பயிற்சியில்லாமையாலும் பொருளில்லாமல் தரித்திரனாயிருப்பதாலும், சோம்பலால் செய்யவேண்டிய காரியத்தில் சக்தியற்றவனாயிருக்கையினாலும் உன்னுடைய சரணங்களில் யாதொரு பக்திக்குறைவானது உண்டாயிருக்கிறதோ, அந்த அபராதத்தை ஸகல ஜனங்களையும் ஸம்சாரமென்னும் கடலிலிருந்து கறையேற்றுகிறவளான ஹே அன்னையே! நீ பொறுத்துக்கொள்ள வேண்டும். உலகில் கெட்ட நடத்தையுடைய பிள்ளைகள் உண்டாவது வழக்கமுண்டு. ஓரிடத்திலும் பிள்ளைகளிடம் பிரியமில்லாத கெட்ட மாதா இருக்கமாட்டாளல்லவா?

ஒருவன் சகல லோகத்திற்கும் தாயாய் விளங்கும் ஸ்ரீ பரமேசுவரியிடம் பிரார்த்திப்பதாவது:—

ஹே மாதாவே! தற்காலம் எனக்கேற்பட்டிருக்கும் பவப்பிணியை நீக்கி என்னைப் பாதுகாக்கவேண்டியது உனது கடமையாகும். அவ்விதம் நீ செய்வதற்குற்ற பக்தி முதலான நற்கர்மங்களொன்றும் என்னால் செய்யப்படாமல் நான் அபராதியாயிருந்தாலும் தாயாகிய நீ அதைப் பொருட்டாகக் கருதாமல் ரக்ஷிக்க வேண்டியது அவசியமே. ஏனென்றால், ஜகத்தில் தப்பான வழியில் செல்லும் புத்திரர்கள் இருக்கலாம். அவ்விதப் புத்திரனைக் காப்பாற்ற மாட்டேனென்று கூறும் கெட்ட தாய் உண்டா? ஆகையால் நான் எவ்விதத் தப்பைச் செய்தாலும், அதைப்பொருட்டாய் நினையாமல் என்னை ரக்ஷிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறார்.

சுபம்.

ஆர்யதர்மம் உப பத்திராதிபர்.

வேதாந்த ஸாரம்.

(சரு உ-வது பக்கத்தொடர்ச்சி.)

இதுவரையில் நிரூபிக்கப்பட்ட சித்தாந்தங்களை அங்கீகரிக்காத சில பௌத்தர்கள்

कथं मनस आत्मत्वं कारणस्य दृशादिवत् ।
कर्तुः प्रयोज्यं करणं न स्वयं तु प्रवर्तते ॥

நேத்திரம் முதலியவைகளைப்போல் காரணமாயிருக்கும் மனதை ஆன்மாவாக எங்ஙனம் கருதமுடியும்? தனது எஜமானனுகிய கர்த்தாவால் ஏவப்பட்டு ஓர் காரியத்தை நடத்தும் காரணமானது தானுக ஓர் கர்மாவை நடத்தக்கூடிய சக்தியை எப்படிப்பெறும்?

करणप्रयोक्ता यः कर्ता तस्यैवात्मत्वमर्हति ।
आत्मा स्वतन्त्रः पुरुषः न प्रयोज्यः कदाचन ॥ ५८४.

ஆத்மா என்று சொல்லக்கூடிய புருஷன் தன்னிஷ்டம்போல் காரியங்களை நடத்தும் சக்தி பெற்றவன். ஒரு சமயத்திலாகிலும் பிறரால் ஏவப்படமாட்டான். ஆகையால் காரணங்களை ஏவுகின்றவனும் ஸ்வயம் கர்த்தாவாயும் எவன் இருக்கின்றனே அவனையே ஆத்மாவென்று கருதவேண்டும்.

अहं कर्तास्म्यहं भोक्ता सुखीत्यनुभवादपि ।
बुद्धिरात्मा भवत्येव बुद्धिधर्मा ह्यहंकृतिः ॥

நான் கர்த்தா, நான் போக்தா, நான் ஸுகி என்கிற அனுபவம் இருப்பதாலும் நான் என்கிற அகங்காரமானது, புத்தி தர்மமாய்

இருப்பதாலும், புத்திதான் ஆத்மாவாக இருக்கவேண்டுமென்று செப்புகிறார்கள்.

இந்த ஸித்தாந்தத்தையும் பிரபாகர தர்க்க மதஸ்தர்கள் அங்கீகரிக்காமல் அக்ஞானம்தான் ஆத்மாவென்று மொழிகின்றார்கள்.

प्राभाकरस्तार्किकश्च तावुभावप्यमर्षया ।
तन्निश्चयं दूषयतो बुद्धिरात्मा कथंत्विति ॥

பிரபாகர்கள் தார்க்கிகர்கள் இவ்விருவர்களும் கீழ்ச்செய்த ஸித்தாந்தத்தை அங்கீகரிக்காமல் புத்தி எப்படி ஆத்மாவாக முடியுமென்று அவர்களின் ஸித்தாந்தத்தைத் தூஷிக்கிறார்கள்.

बुद्धेरज्ञानकार्यत्वात् विनाशित्वात्प्रतिक्षणम् ।
बुद्ध्यादीनां च सर्वेषामज्ञाने लयदर्शनात् ॥ ५५९.

புத்தியானது அக்ஞானத்தினுடைய காரியமாயிருப்பதாலும் ஒவ்வொரு க்ஷணமும் நாசத்தையடையும் தன்மையிலிருப்பதாலும், புத்தி முதலிய எல்லாவற்றிற்கும் அக்ஞானத்தில் லயம் காணப்படுவதாலும் புத்தி ஆன்மாவல்ல.

अज्ञोऽहमित्यनुभवादास्त्रीबालादिगोचरात् ।
भवत्यज्ञानमेवात्मा न तु बुद्धिः कदाचन ॥

ஸ்திரீகள் பாலர்கள் முதலிய சகல ஜனங்களுக்கும் நான் அக்ஞன் என்கிற அனுபவமிருப்பதால் அக்ஞானத்தையே ஆத்மாவாகக் கூறவேண்டும். புத்தி ஆத்மாவாகமாட்டான். வேதத்திலும் புத்தி என்னும் விக்ஞானமயனைக்காட்டிலும் வேறாகவும் ஆனந்தமயமாயுமிருக்கும் அக்ஞானமே ஆத்மா என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

दुःखिनोऽपि सुषुप्तौ तु आनन्दमयता यतः ।
सुप्तौ किञ्चिन्नजानामीत्यनुभूतिश्च दृश्यते ।
यत एव मतो युक्त्याह्यज्ञानस्यात्मता ध्रुवम् ॥ ५६३.

சுருதியின் அபிப்பிராயத்திற்கிணங்கவே துக்கத்தையுடையவனு யிருந்தாலும் ஸுஷுப்தியில் ஆனந்தமயனுகவே காணப்படுகின் முன். இவ்விதம் இருக்கிறுனென்பது அவன் விழித்துக்கொண்ட பிறகு "நான் ஒன்றையும் அறியேன் ஸுகமாய்த் தூங்கினேன்" என்று அவனுடைய அனுபவம் இருப்பதாலும் காணப்படுகின் றது. இவ்விதமிருப்பதால் அக்ஞானத்தையே ஆத்மாவென்று சொல்வதுதான் யுக்தம் என்று அவர்களின் ஸித்தாந்தமாகும்.

भाट्टास्तु प्रज्ञानघन एव आनन्दमयः इत्यादिश्रुतेः सुषुप्तौ प्रकाशाप्रकाशसद्भावात् मामहं न जानामीत्यनुभवाच्चाज्ञानोपहितं चैतन्यमात्मेति वदन्ति ॥

பட்டமதத்தை அனுசரிக்கும் மற்றும் சிலர் "ஞானஸ்வரூபன், ஆனந்தமயன்" என்று சுருதியிருப்பதாலும் ஸுஷுப்தியில் பிர காசரூபமாயும், அப்ரகாசரூபமாயும் இருப்பதாலும் 'என்னை நான் அறிந்துகொள்ளவில்லை' என்கிற அனுபவமிருப்பதாலும் அக்ஞா னேபஹிதமான சைதன்யம்தான் ஆத்மா என்கிறுர்கள்.

இந்த அபிப்பிராயத்தையே,

इति तन्निश्चयं भाट्टा दूषयन्ति स्वयुक्तिभिः ।
कथमज्ञानमेवात्मा ज्ञानंचाप्युपलभ्यते ॥

அக்ஞானமே ஆத்மாவென்கிற பிரபாகரதார்க்கிகர்களுடைய ஸித் தாந்தத்தைப் பட்ட மதஸ்தர்கள் தம்முடைய யுக்திகளினுல் அடி யில் வருமாறு தூஷிக்கிறுர்கள். ஸுஷுப்தியில் ஞானமிருப்ப தாக அறியப்படுகிறபடியால் அக்ஞானம்தான் ஆத்மாவென்று எப்படிக் கூறமுடியும்?

ज्ञानाभावे कथं विद्युरज्ञोऽहमिति चाज्ञताम् ।
अस्वाप्सं सुखमेवाहं न जानाम्यत्र किंच न ॥

ஸுஷுப்தியில் ஞானமில்லாவிட்டால் "நான் சுகமாகத் தூங்கி னேன். அந்த ஸமயத்தில் மற்றெதையும் அறியேன்" என்று மொழியும் அக்ஞன ஒருவன்தன்னுடைய அறிவின்மையை எப்படி அறிகின்றுன்.

इत्यज्ञानमपि ज्ञानं प्रबुद्धेषु प्रदृश्यते ।
प्रज्ञानघन एवानन्दमय इत्यपि श्रुतिः ॥

"நித்திரையிலிருந்து எழுந்திருந்தவர்களிடம் கீழ்க்காட்டியபடி அக்ஞானம், ஞானம் இவ்விரண்டும் காணப்படுகின்றது" என்று சுருதியும் இவ்விதமே கூறுகின்றது.

आत्मातश्चिज्जडतनुः खद्योत इव संमतः ।

ஆகையால் ஆத்மாவானது விளக்கில்விழும் விட்டில்போல் பிரகாசரூபமாயும் ஜடஸ்வரூபமாயுமுள்ளது.

न केवलाज्ञानमयो घटकुड्यादिवज्जडः ।

இஃதன்றி கடம், சுவர் முதலியவைபோல் ஜடமாயிருக்கும். அக்ஞானத்திற்கு மாத்திரம் ஸித்திக்கமாட்டாது என்று கருதுவதாக ஆசார்யாளும் அறிவித்திருக்கிறார்கள்.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஹிந்துமத தர்மம்.

(சநுரு-ம் பக்கத்தொடர்ச்சி)

(1) பிராமணரல்லாத சிநேகிதர்களே! மோக்ஷசாம்ராஜ்ய உன்னத பதவியையடைய சமமாகவே பாத்தியதையையுடைய நீங்கள் உங்களை அனாரியர்களென்று இளப்பம்சொல்லி ஆர்யதர்ம பலன் உங்களுக்குப் பாத்தியமில்லையென்று சொல்லி மோசம் செய்பவர்களுடைய பேச்சுக்குச் செவிகொடாதீர்கள்.

(2) ஜாதி வர்ணாச்ரமத்தை அழிப்பதால் பிராமணரல்லாதவர்களும் பிராமணர்களும் தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிடுவார்கள். இகபர வாழ்க்கைகளை இகழ்ந்துவிட்டால் ஹிந்துக்களாகிய எல்லோருக்கும்! அனர்த்தந்தான் சம்பவிக்கும். இக்காலத்தில் பிராமணர்களைப் பிராமணரல்லாதார் தோஷம் சொன்னாலும் முன்

காலத்திலிருந்த மஹரிஷிகளைத் தாழ்த்திப் பேசுவதும் அவர்கள் பக்ஷபாதத்துடன் கிரந்தங்களைச் செய்தார்களென்று சொல்வதும் மிகவும் அநியாயமே. ஸ்மிருதிகளில் எங்கும் பிராமணர்களையே ஸ்தோத்திரம் செய்யவில்லை. பிராமணர்களைத் தாக்ஷண்யப்பட்டு விட்டுக்கொடுக்கவுமில்லை. சாஸ்திரோக்த கிரந்தங்களைக் கொஞ்சம்கூட அலக்ஷியம் செய்யும் பிராமணர்களை ஸ்மிருதிகள் படுத்தும்பாடு கொஞ்சநஞ்சமில்லை. அதுபோலவே சூத்திரர்களையும் ஸ்மிருதிகள் எங்கும் வேண்டுமென்று நிந்திக்கவும் இல்லை. அவர்களை அவைகள் அவ்வளவு ஹிம்ஸிக்கவுமில்லை. ஒவ்வொரு ஜாதியார்களுக்கும் தர்மம் இன்னதென்று விதித்து அதை மீறி நடந்தவர்கள் பதிதராவார்களென்று சொன்னால், அஃது ஒரு பக்ஷபாதமாகுமா? அப்படி தர்மத்தை விதித்திருப்பது ஒருவருக்கொருவர் கலகமில்லாமல் வாழ்வதற்கு எவ்வளவு சௌகரியம் என்பதை அநுபவசாலிகளே அறிவார்கள். பிராமணர்கள் ஒவ்வொரு ஜாதியாரும் நல்லகதியடையும்பொருட்டே பற்பல சாஸ்திரங்களையும் எழுதிவைத்தார்களேயல்லாது தனது ஜாதியின் க்ஷேமத்திற்கு மாத்திரம் அவைகளை எழுதிவைத்துக்கொண்டாரில்லை. நீங்கள் சூத்திரர்கள் சுச்ருஷைசெய்வதென்றால் ஏதோ ஈனமான அடிமைத்தொழில் செய்வதென்று எண்ணியிருக்கிறீர்கள். அப்படி எண்ணுவது பிசகு. சுச்ருஷை என்பதின் உண்மையான அர்த்தத்தை நீங்கள் தெரிந்துகொள்ளவில்லை. ஏதோ முன்னோராகிய ரிஷிகள் தங்கள் வம்சத்தினரின் நலத்திற்காகமட்டும் அநேக காரியங்களைச் செய்துவைத்துவிட்டார்கள் என்று நினைக்கிறீர்கள். அதுவும் சரியல்ல. அவர்கள் எப்படித் தனது ஜாதி நற்கதி அடையும்பொருட்டும் அவர்களுடைய விருத்தியை உத்தேசித்தும் பிர்மவித்யா விஷயமான கிரந்தங்களை எழுதிவைத்தார்களோ, அப்படியே க்ஷத்திரியர்களின் நிமித்தம் அநேக நீதி கிரந்தங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். க்ஷத்திரியர்களின் நிமித்தம் தண்டநீதி கிரந்தங்களை எழுதிவைத்திருப்பவர்கள் வியாஸர், நாரதர், காமந்தகர், சுக்கிரர், கடகர்ப்பரன், சாணக்யன் முதலானவர்களாகிய பிராமணர்களே யுத்தவித்தையை உபதேசித்தவர்கள் சுக்கிரன் முதலான பிராமணர்கள்தான், வைச்யர்களின்

நிமித்தம் பசுபாலனமார்க்கம், வியாபாரமுறை இவைகளையியற்றி பிருகத்ரதனென்பவனுக்கு உபதேசித்த பகவான் பராசரராகிய பிராமணோத்தமரே. அப்படியே சூத்திரர்களுக்காக விவசாயசாஸ்திரம், அச்வலக்ஷண சாஸ்திரம் முதலியவைகளை எழுதிவைத்த மஹான் சாலிஹோத்ரரென்னும் வேதியரேயாவர். யானைக்காக ஆயுள்வேத சாஸ்திரமெழுதிவைத்த மஹான் பாலகாப்யரென்ற பிராமணோத்தமரே. இந்த அச்வகஜ வைத்தியத்தை பிராமணர் கைக்கொண்டாரா? அல்லது பிராமணனுக்கே இவை யென்று சொன்னாரா? இரண்டுமில்லை. கிருஷிக்கு உபயுக்தமாய் பூபரீக்ஷை வழி காண்பித்தவர்கள் சாமஹதிகர்களென்னும் பிராமணர்களே.

ஹஸ்த ஆயுர்வேதம், விருக்ஷாயுர்வேதம் முதலிய பல ஆயுர்வேத சாஸ்திரங்களையும், நாட்டிய சாஸ்திரம் கிருஹ நிர்மாண சாஸ்திரம், சித்திரமெழுதும் சாஸ்திரம், பல அற்புத சிற்பசாஸ்திரம் முதலிய 64 கலைஞர்ன சாஸ்திரங்களையும் எழுதிவைத்தவர்கள் பிராமண குலத்நிலுதித்தவர்களே. ஓரிடத்தில் முளைத்திருக்கும் கன்றுகளை மற்றோரிடத்திற்குக் கொண்டுபோகும் கிரமமும், பூமியின் ரோகலக்ஷணங்கள் அதற்குச் செய்யவேண்டிய சிகித்ஸை விருக்ஷங்களின் விசேஷங்கள், அதற்கு மாற்றல் விருக்ஷத்தில் புஷ்பம் அதிகமாய் உண்டாகச் செய்தல், கன்றுகளை நடுவதற்கு வேண்டிய இடைவெளி, பதிகம் போடவேண்டிய கிரமம், விதைகளை முதலில் சம்ஸ்காரம் செய்யவேண்டிய முறை ஆகிய இன்னும் அநேக விதங்கள் வெகு விஸ்தாரமாய் அந்த விருக்ஷாயுர்வேத சாஸ்திரத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

ஆயுர்வேத கிரந்தங்களை எழுதிவைத்த **चरकसुश्रुतादि** (சரக சுச்ருதர்) பிராமணர்கள் தமது ஜாதியாரின் நன்மைக்காக அவைகளை எழுதிவைத்தார்களா? இல்லையே.

“तस्माद्ब्राह्मणेन भेषजं न कार्यम्”

என்று சொல்லிப் பிராமணர்கள் ஆயுர்வேதத்தொழிலை ஒருகாலத்திலும் செய்யக்கூடாதென்று தடுத்துவிட்டார்களே.

இதுபோலவே கிருஷி செய்யும் வித்யை, வஸ்திரம் நெய்யும் தொழில், வீடுகட்டும் தொழில், சித்ரம் எழுதும் தொழில் இவை

களில் ஒன்றையாவது பிராமணர்களின் நன்மைக்காகப் பிராமணர்கள் செய்தனரென்று சொல்லமுடியுமா ?

இவ்வளவு சாஸ்திரங்களை எழுதிவைத்தும் பிராமணர்கள் தாங்கள் எந்த சாஸ்திரங்களை எடுத்துக்கொண்டனரென்பதைச் சற்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும். கேவலம் பரலோகத்திற்கு மட்டும் சாதகமான கர்மாநுஷ்டானங்களையும் மிகுந்த சரீர கிலேசங்களைக் கொடுக்கக்கூடியதும் க்ருச்சர உபவாஸாதி நியமங்களைப் போதிக்கக்கூடியதுமான வேதங்களையும் சாஸ்திரங்களையும் தங்களுக்கு வைத்துக்கொண்டார்களேயல்லாது இகலோக சௌக்கியங்களுக்கு மிக்க ஆவச்யமானவைகளும் ஏராளமான திரவியங்களைச் சேர்க்கச் சாதகங்களுமான, மேற்சொல்லிய வியாபாரம், கைத்தொழில் முதலியவைகளைச் செய்யத் தங்களதுமனத் தாலுங்கூடப் பிராமணர்கள் இஷ்டப்பட்டார்களில்லையே ?

பிராமணர் சூத்திர விருத்தியை மட்டிலும் தொடவே கூடாதென்று "सर्वथा तु वृत्तिरशौद्रेण" என்று கௌதமர் தடுத்திருக்கிறார்.

சூத்திரர்களுக்காகச் செய்திருக்கும் விஷயங்களைப் பாருங்கள். ஈனத்தொழிலேற்படுத்தியிருக்கிறார்களா? என்று கவனியுங்கள். நாட்டியத்தில் ஜீவிக்கவேண்டியவர்கள் சில சூத்திரர்களுக்கே யென்று பரதநாட்டிய சாஸ்திரம் எழுதிவைத்த பரதாசாரியர் பிராமணரேயாம். இவர் தமது பெண் நாட்டியமாடிப் பிழைக்கட்டுமென்று சிரமப்பட்டு அந்த சாஸ்திரத்தை யெழுதி வைத்தாரா? வாசனைத்திரவியம் சேர்ப்பதினால் சிலர் ஜீவிக்கட்டுமென்று கந்தசாஸ்திரம் எழுதிவைத்தவர் அத்திரி என்ற பிராமணோத்தம மஹருஷி. இவர் ஆச்ரமத்திற்கு ஸ்ரீராமர் செல்ல ஸீதாதேவிக்கு அனசூயை விசேஷமாய் வாசனைத் திரவியங்களால் உபசரித்தாளென்று ராமாயணத்தில் கூறப்பட்டிருக்கிறது. வஸ்திரம் நெய்யும் சூக்ஷ்மவிதியைக் கண்டவர்கள் பிராமணர்களே. ரதம் முதலானவைகளைச் செய்யவும், வாஸ்து நிர்மாணம் செய்யவும் சாஸ்திரம் எழுதிவைத்தவரும், சித்திரசாஸ்திர வழிகளைக் கண்டவரும் பிராமணரே. அவர்களுடைய கருணையையும்

பக்ஷபாதமின்மையையும் பார்த்தீர்களா? எந்த மஹான் தண்ட நீதியை க்ஷத்திரியர்களுக்காக எழுதிவைத்தாரோ, அவர் ராஜ்ய பாரம்பண்ண ஆசைப்பட்டது கிடையாதே. சந்திரகுப்தனுக்கு ராஜ்யம் சம்பாதித்துவைத்த சாணக்யனென்னும் பிராமணன் தனது வீட்டில் கோமயமும் அம்மியும் முட்டையும் பாழும் சுவரும் நிற்கக்கிடைத்தவனுய் மரணமடைந்தானே. அதுபோல ஆபரண நிர்மாணவழி சொன்னவருடைய ஆபரணம் ருத்ராக்ஷமே. வாஸ்துசாஸ்திரம் எழுதிவைத்தவருக்கு ஜீர்ணமான பர்ணசாலைக் குடிசைதான் வாசஸ்தானமாகிய அரண்மனை. வஸ்திரம் நெய்யும் தொழிலைச் சொன்னவருக்கு மாவுரிதான் ஆடை. கிருஷி சாஸ்திரம் சொன்னவருடைய ஆகாரம் சருகும் கிழங்குமேயாம். வாசனைத்திரவிய வழிசொன்னவர் பூசிக்கொண்டது பஸ்பமேயாம்.

இவ்விதமாய் எழுதப்பட்ட எல்லா சாஸ்திரங்களையும் பிராமணர்கள் பிராமணரல்லாதாருக்காகவே கொடுத்துவிட்டார்கள். இதெல்லாம் பக்ஷபாதச் செய்கையாகுமா? பக்ஷபாதமென்பது முன்னுமில்லை, பின்னுமில்லை. சூத்திரர்களின் தொழிலில் பிராமணர்கள் பிரவேசிக்கக்கூடாதென்று செய்ததுபோலவே வேதம் ஓதும் தொழிலைச் சூத்திரர்களுக்குதவாதென்று தடுத்திருந்தால் அது ஒரு பக்ஷபாதமாகுமா? சூத்திரர்களுக்குப் பரலோகமோக்ஷமுண்டே. நந்தன், கபீர்தாஸ் முதலியவர்கள் நேரே பரலோகம் அடையவில்லையா? இப்படியெல்லாம் பிராமணர்கள் பாடுபட்டு ஜனங்கள் எல்லாருக்கும் க்ஷேமமுண்டாகவேண்டுமென்று எவ்வளவோ உழைத்திருக்க, பிராமணர்களை உங்களில் சிலர் தூஷிப்பது நியாயமாகுமா?

ஒருவன் உலகத்திலுள்ள யாதாவதொருவகைப் பதார்த்தத்தை அடியோடு வெறுத்தால் அவனுக்கு அதன் குணம்சத்தை அனுபவிக்கவழியிராது. அதாவது மாம்பழமென்ற தினுசையே ஒருவன் வெறுத்தால் நல்ல மாம்பழத்திலிருக்கக்கூடிய மதுரமான ரஸத்தின் ருசியை அந்த வெறுப்பவன் அனுபவிக்கமுடியாமல் போய்விடும் அப்படிப்போலவே பிராமணனில் இவன் கெட்டவன் அவன் கெட்டவன்என்று பார்த்துத்தள்ளிக் கெட்டவனைத் திருத்துவதற்குப் பதிலாய் பிராமணஜாதி யானையேமொத்

தமாய் ஒருவன் வெறுத்தானானல் பிராமணனுடைய குணங்களையும் உத்தமமான கொள்கைகளையும் ஒருங்கே வெறுத்துத் தள்ளும்படியிருக்குமல்லவா? அப்படிப்பட்ட உத்தமமானகொள்கைகளை ஒருவன் முன் வைத்துக்கொண்டு உயிர் வாழ்ந்தால் மட்டுமே அவன் முன்னுக்குவரலாம். எவ்வளவுக் கெவ்வளவு ஒருவன் ஜாஸ்தி எண்ணிக்கையுள்ள நற்கொள்கைகளைத் தனக்குக் குறியாய் முன் வைத்துக்கொண்டு தனது நடத்தையை ஒழுங்கு படுத்திக் கொள்ளுகிறானே அவ்வளவுக்கவ்வளவு அவன் ஜனசமூகத்திற்குச் சாச்வதமான உபகாரியாகிறான். அப்படிப்பட்டவர்களுக்கு எக்காலத்திலும் எத்தேசத்திலும் ஜனசமூகத்தாரால் உண்மையான மரியாதையுண்டு. நெபோலியனைக்காட்டிலும் ஸாக்ரடீஸ்க்கு ஜனசமூகச்சேவை புரிவதில் அதிகம்பேர் வந்திருப்பதற்குக்காரணம் அந்த ஸாக்ரடீஸ் என்பவர் பெரிய பிராமணக் கொள்கைகளின் செல்வாக்குக் குள்ளாயிருந்தபடியால்தான்.

எவனொருவன் பிராமணரை வைரத்தமாய் வெறுக்கிறானே அவன் பிராமணனுக்குரித்தான குணங்களையும்வெறுக்காமலிரான் அக்குணங்களைத் தனது உயிர்வாழும் நடத்தைக்குறியாக அங்கீகரிக்கவும் மாட்டான். பிர்ம்மத்வேஷம் கொள்வதினால் ஒருவன் எப்போது பிர்ம்மகுணங்களையும் வெறுக்கிறானே அப்போதே அவனுடைய நாசம் முன்னேயோ பின்னேயோ சம்பவிக்கவே செய்யும். பிர்ம்மத்வேஷம் கொள்ளக்கூடாதென்ற நடவடிக்கையானது முகம்மதியராளுகைக் காலத்திலும் இருந்து வந்தது. பேர்போன அக்பர் சக்ரவர்த்தியின் ஆளுகையில் உண்டாயிருந்த உன்னதவாழ்விற்கு அவர் அனுசரித்துவந்த பிராமணக்கொள்கைகளே ஒருவாறு காரணமாகும். அவுரங்கஜீப் சக்ரவர்த்தியின் ஆளுகையில் தேசத்திற்குண்டான நாசத்திற்குப்பிராமணக்கொள்கைகளின்மீது அவர் கொண்ட த்வேஷமே காரணமென்னலாம். பிராமணர்கள் உலகவியாபாரத்தைச் சுருக்கித்தத்வஞானப் பயிற்சியில் முனைந்து தேசநன்மைக்காகத் தன் புத்திப் பிரயத்தனங்கள் முழுவதும் பயன்படும்படி செய்துவந்ததால் தான் இந்தியாவில் அவர்கள் கீர்த்தி முற்காலம் முதல் நிலைநின்று வந்திருக்கின்றது. பிராமணர்களின் தற்கால நிலைமை அந்நியநாட்டு நாகரீகக்

குழப்பத்தாலும் குழந்தைப்பருவமுதற்கொண்டே அந்யபாஷைப் பழிற்சியாலும் எவ்வளவு தாழ்ந்துபோயிருந்தாலும்கூட அவர்களுடைய பூர்வ சம்பிரதாயங்களும் தர்மானுஷ்டானமும் அவர்களுடைய சரீரஸம்ஸ்காரத்தினுல் அவர்களை விட்டு நீங்கிப்போகவில்லை. பிராம்மண்யமும் ஹிந்துமதமும் வேறு வேறில்லை.

ஹிந்து என்ற பதத்திற்கு டிக்ஷ்ணரிப்படி அர்த்தமென்னவெனில் ஹிந்துஸ்தானில் பிறந்து பிராமண்யத்தில் நம்பிக்கை வைத்துவரும் இந்திய சுதேசி என்பது, ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் மற்ற பாஷைகளிலும் புகட்டியிருக்கும் சாஸ்திரங்கள் புராணங்கள் எதைப் பார்த்தாலும் அவைகளில் பிராமண்யத்தின் உத்கிருஷ்டம் வலைபோல் பின்னிக்கொண்டு நிற்கிறது. ஹிந்து மதமும் பிராம்மண்யமும் நத்தாங்கூடும் அதிலுறையும் பூச்சியின் வளர்ச்சியும்போல ஒன்றுக்கொன்று ஜீவநிலையாய் இருந்துவருகிறது. பூச்சியைக் கிண்டியெடுத்தால் கூடுமுதிராது, கூட்டைக் கிழித்தெடுத்தால் பூச்சி உயிரோடிராது. அதுபோல பிராமண்யம் விலகின ஹிந்துமதம் உயிரோடிருக்குமென்று எண்ணுதல் மனதிற்கும் புத்திக்கும் எட்டாத அசம்பாவிதமென்று மேல்நாட்டுச் சரித்திரக்காரர்களும் எழுதிவைத்திருக்கிறுர்கள். பிராமண்யத்தைத் துவேஷிப்பவனெவனே அவன் ஹிந்துமதஸ்தனென்று சொல்லிக்கொள்ள முடியாது. ஹிந்து மதத்தைக் கைவிட்டவனுவான். பூர்வ ஸம்ஸ்காரம் தன்னுள் அழுந்தியிருக்கும் சொந்த மதத்தைக் கைவிட்டவன் எவனே, அவன் இந்த ஜன்மத்தில் வேறொரு மதத்தில் புதிதாய்ப் புகவும் யோக்கியதையை இழந்தவனுகிறுன். திருப்பித்திருப்பி இவ்வளவுதூரம் எடுத்துரைத்ததெல்லாங்கூடி இந்தியாவிலுள்ள பிராமணர்களும், பிராமணரல்லாத இதர ஹிந்துக்களும் இப்போதாவது கண் விழித்துக்கொண்டு அந்நிய நாகரிக வித்தைப்பயிற்சியால் தங்களுக்குள் உண்டாயிருக்கும் சச்சரவுகளை நீக்கி மதத்திற்கே வந்திருக்கும் இந்த ஆபத்தான காலத்தில் அவரவர்கள் செய்யவேண்டிய உசிதமான முயற்சி எதுவோ, அந்தக் கடமையைக் கைக்கொள்ளவேண்டும் என்பதுவேயாம். ஆகையால் ஹிந்துமதத்தின் எல்லா வகுப்பினேரும் அன்னியோன்யமாய் ஒருமித்துத் தத்தம் ஸ்வதர்மானு

ஷ்டான தர்மத்தைக் கைக்கொண்டு கலிபுருஷனை லக்ஷியம் செய்யாமல்

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थानमधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥
परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय सम्भवामि युगे युगे ॥

என்று அபயவாக்குக் கொடுத்திருக்கும் ஸ்ரீ பகவானையே நம்பிச் சரணமடைந்து பக்திசெய்து ஸ்வதர்மத்தை நடத்திவந்தால் எப்போதாவது அந்த தர்மத்திற்கு க்லானி வரும்போலிருந்து அதர்மம் மேலெழுந்தால் அச்சமயம்பார்த்து தக்ஷணமே பகவான் இப்புண்ணிய பூமியில் அவதாரம்செய்து தர்ம ஸ்தாபனத்தை நிலைநிறுத்தி நம்மையும் மற்ற உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளையும் ரக்ஷித்துக் காப்பாற்றுவார் என்பதில் சந்தேகமேயில்லை.

ஓம் தத்ஸது.

ராவ்ஸாஹேப் எல். ஏ. ரெங்கசாமி அய்யர்.

வேதங்கள் அபௌருஷேயமானவை.

(சருகூ-வது பக்கத்தொடர்ச்சி.)

முன் ஸஞ்சிகையில் புண்யம், பாபம் முதலிய அதீந்திரிய பதார்த்தங்களை அறிய ஆகமம் இன்றியமையாதது என்று கூறினோம். § பௌருஷேய அபௌருஷேய பேதங்களினால் இரண்டாகிய ஆகமத்தில், அபௌருஷேய ஆகமத்தினாலேதான் தர்மாதிகளை நிச்சயிக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில் புருஷ ரசித

---

§ பௌருஷேயம் அபௌருஷேயம் என்று ஆகமம் இருவகையாகும். ஸ்மிருதிகளையும் புராணங்களையும் பௌருஷேய ஆகமமென்று வியவகரிக்கும் சிலரின் அபிப்பிராயத்தை அனுஸரித்து இங்கும் வியவகரிக்கப்படுகின்றது.

மான கிரந்தங்களில் பிழைகள் இருக்க அவகாசமுண்டு என்பது முன்னமேயே கூறப்பட்டது. ஆகையால் அவர்கள் வார்த்தையில் நமக்கு விசுவாசம் ஏற்படாது. "ஆனால் புத்தர், கபிலர், ரிஷபர் போன்ற மகான்களின் வாக்கினாலேயே தர்மாதிகளை அங்கீகரிக்கலாம். அவர்கள் ஸர்வக்ஞர்களாகையால் அக்ஞான மூலகமான தோஷங்களே அவர்களிடம் இல்லை." என்று சொன்னால் அவர்கள் ஸர்வக்ஞர்கள் என்னும் விஷயத்தில் என்ன பிரமாணம் என்று கேட்போம். நம்முடைய பிரத்யக்ஷமே பிரமாணம் என்றால் நாம் எல்லாவற்றையும் முதலில் அறிந்து அவையனைத்தையும் அவர்கள் உணர்ந்திருக்கிறார்களென்று சொல்லவேண்டும். அதாவது நாமே ஸர்வக்ஞர்களாயிருக்கவேண்டும். ஆனால் நாம் அப்படிப்பட்டவர் அல்லோம் என்று தோன்றுகிறது. ஒரு கால் நாமே ஸர்வக்ஞர் எனினும் நம் வாக்கினாலேயே ஏன் தர்மாதிகளை ஸ்தாபிக்கக்கூடாது? புத்தாதிகளைத் தேடவேண்டியதில்லை. அவர்கள் ஸர்வக்ஞரென்னும் விஷயத்தில் அநுமானம் ஆகமம் முதலிய பிரமாணமும் இல்லை. புத்தாதிகள் ஈசுவராவதாரமானதால் ஸர்வக்ஞர் என்றால் அவதாரகாலங்களிலும் அஸுரர்களை மோஹிக்கச் செய்வதற்காக மாயையை உபயோகிக்கிறார். புத்தாவதாரத்தில் அஸுரர்கள் மோஹிப்பதற்காகவே வேதம் அப்ரமாணம் என்று உபதேசித்தார்

वेदोऽप्रमाणमित्युक्त्वा बुद्धस्तान्हि व्यमोहयत् । मणिमञ्जरी ।

கடைசியாகத் தர்மாதிகளை ஸாதிக்க ஓர் அபௌருஷேய வாக்யம் தான் அவசியம். அவ்வாக்கியமே வேதம் என்று ஏற்படுகிறது.

நாம் உலகில் பார்த்திருக்கும் எல்லாக்கிரந்தங்களுக்கும் ஓர் ஆசிரியர் உண்டு. ஆசிரியரேயில்லாத நூலைக்கண்டதேயில்லை. வேதத்துக்கும் ஓர் ஆசிரியர் இருந்திருக்கவேண்டும். ஒரு நிர்மானுஷ்யமான அரண்யத்தில் ஓர் பெரிய அரண்மனையைப் பார்த்தால் யாராவது ஒருவன் அதைக் கட்டியேயிருக்கவேண்டும் என்று எப்படி ஊஹிக்கிறோமோ அப்படியே, வேதகர்த்தாவையும் ஊகிக்கவேண்டும் என்பது ஒழுங்கன்று. அவ்விதம் ஊஹிப்பவரை நாம் இரண்டொரு கேள்விகள் கேட்போம். அவர் தர்மாதர்மங்களை ஒப்புக்கொள்ளுகிறாரா இல்லையா? இல்லையெனின் ஒப்புக்

கொள்ளவேண்டியதவசியம் என்பதை இனி நிரூபணம் செய்வோம். அத்தர்மாதிகளைப் போதிக்கும் பிரமாணம் பௌருஷேயமா அபௌருஷேயமா? பௌருஷேய வாக்கியம் முக்கியப் பிரமாணமில்லையென நிரூபிக்கப்பட்டது. ஆகையால் அவரும் அபௌருஷேயமென்று ஒப்பவேண்டுமே தவிர மனம் போன போக்கெல்லாம் ஊஹிக்கலாகாது.

யாரோ ஒருவன் வேதத்தைச் செய்து வெகுகாலம் ஒருவரிடமும் வெளிப்படுத்தாமல் கடைசியாக அபௌருஷேயமென்றே வெளிப்படுத்தினான் என்று ஏன் சொல்லக்கூடாது என்று சிலர் கேட்கலாம். ஆயினும் இந்தத் தந்திரத்தையும் நாம் சுலபமாய்க் கண்டு பிடிக்கலாம். வேதாத்யயனம் செய்து வருகிற ஒவ்வொரு கனபாடியும் யாரிடம் அத்யயனம் செய்தனரென்று விசாரித்தால் அவர் தம்தந்தையிடமோ வேறு ஒருவேதம் வந்தவரிடமோ அப்பஸித்ததாகச் சொல்வார். அத் தந்தையும் வித்வானும் அவருக்கு முன்னிருந்தவரிடம் கற்றுக்கொண்டதாகப் பதிலுரைப்பார்கள். இப்படியே ஒவ்வொருவரும் தத்தம் முன்னோரிடம் பயின்றதாகச் சொல்லும்போது ஷி गूढकर्ता தான் ஒருவரிடமும் பயிலவில்லை என்று கூறுவார். அதனால் அவரேதான் வேதத்தை இயற்றியிருக்கிறார் என்று அறியலாம். "ஒருவரிடமும் நான் அத்யயனம் செய்யவில்லை" என்று சொல்பவர் ஒருவரும் இல்லையாகையால் ஒருவரும் வேதத்தை இயற்றவில்லை.

வஸிஷ்டாதி மகரிஷிகள் ஒருவரிடமும் அத்யயனம் செய்யாமலே வேதங்களைத் தரிசித்திருக்கிறார்கள் ஆகையால் தான் அவர்கள் வேதத்ருஷ்டாக்கள் என்றழைக்கப் படுகின்றனர். அவர்களும் தாங்கள் உண்மையில் ஒருவரிடமும் அத்யயனம் செய்யவில்லையென்றேதான் கூறுவார்களாகையால் அவர்களே வேதமியற்றியுள்ளார் என்று நாம் ஒப்புகிறோமா அதுபோல் கூடகர்த்தாவும் அத்யயனம் செய்யவில்லை என்று கூறுவதால் வேதத்தைச் செய்யவில்லை என்று ஏன்கொள்ளலாகாது. வஸிஷ்டர்முதலியோர் "அநாதிகாலமாய் இருந்து வருகிற வேதங்களை நாம் ஈசுவர கிருபையால் கண்ணுற்றோம்" என்று ஒப்புக்கொள்வதாலும் அவர்களின் வார்த்தையை விசுவாஸிக்க வேதத்ரஷ்டாக்களின் லக்ஷணங்கள் அவரிடம் இருப்பதாலும்கூட கர்த்தாவினிடம் அவ்வித லக்ஷணமின்மை

யால் அவன் வார்த்தையை நம்பமுடியாது என்றும் அறிந்து வேத கர்த்தா ஒருவன் இருந்தால் அவனுக்குப் பிரஸித்தி ஏற்பட்டிருக்கும் ஒருவரும் வேதத்தை இயற்றினதாகப் பிரஸித்தி இல்லாமையால் அபௌருஷேயம் என்பதற்கு என்ன ஆக்ஷேபணை!

ஸாமுத்ரிகா சாஸ்திரத்தில் உத்தம புருஷர்களுக்கு முப்பத்திரண்டு லக்ஷணமுண்டு என்று கூறப்பட்டிருக்கிறது.

அவைபாவன:—

पञ्चदीर्घः पञ्चसूक्ष्मः सप्तरक्तः षडुन्नतः ।
त्रिपृथुर्लघुगम्भीरः द्वात्रिंशल्लक्षणस्त्विति ॥

पञ्चदीर्घः—புஜம், கண், கபோலம், காது, மூக்கு இவ்வைந்தும் நீண்டிருக்கும்.

पञ्चसूक्ष्मः—சர்மம், தலைமயிர், நகம், விரல், விரல் கணுக்கள் இவ்வைந்தும் குட்டையாயிருக்கும்.

सप्तरक्तः—பாதம், உள்ளங்கை, கண்ணின் ஓரம், கடைவாய் நாக்கு, உதடு, நகம் இவ்வேழும் சிவப்பாய் இருக்கும்.

षडुन्नतः—மார்பு, வயிறு, நெற்றி, புஜம், கால், கை, இவ்வாறும் உயரமாய் இருக்கும்.

त्रिपृथुः—நெற்றி, இடுப்பு, மார்பு, இம்மூன்றும் விசாலமாயிருக்கும்.

त्रिलघुः—முழங்காலின் கீழ்ப்பாகம், கழுத்து, ஆண்குறி இம்மூன்றும் குட்டையாயிருக்கும்.

त्रिगंभीरः—தொப்புள் [கொப்பூழ்] முதலிய மூன்று ஸ்தானங்கள் ஆழமாய் இருக்கும் ஆகமொத்தம் முப்பத்திரண்டு லக்ஷணங்கள். இவைகளினிடையே இருபது லக்ஷணங்களுக்குக்குறையாமல் ஒருவனிடம் இருந்தால் அவன் வேதத்ருஷ்டாவாக விருப்பான்.

विंशल्लक्षणतोऽनूनस्तपस्वी बहुवेदवित् ।
वेद इत्येव यं पश्येत् स वेदो ज्ञानदर्शनात् ॥

பிரஹ்மாண்டபுராணம்.

விசேஷாம்சம்:—

பிருஹத் பாஷ்பத்தில் பிரம்மாவுக்கு முப்பத்திரண்டு லக்ஷணங்கள் உண்டு என்றும பதினாறு லக்ஷணங்கள்வரையில் தேவதைகளுக்கு உண்டு என்றும் षोडशादासुरा स्मृताः (आ-पर्यन्तम्) சொல்லப்பட்டிருப்பதால் தேவதைகளுக்கே இருபது லக்ஷணங்களில்லாதிருக்க வஸிஷ்டாதிகளுக்குமாத்திரம் இருபது எப்படித்தகும் என்றால் ௸ முப்பத்திரண்டைத் தவிற வேதத்ருஷ்டாவின் லக்ஷணங்களும் முப்பத்திரண்டு அவைகளில் இருபதுக்குக் குறையாமலுள்ளவன் வேதத்ருஷ்டா என்று அர்த்தம்.

தர்மம், அதர்மம், முதலிய பல அதீந்திரிய பதார்த்தங்களை ஸாதிப்பதற்கு அபௌருஷேபமான வேதம் அவசியம் என்று சொன்னோம். சில சாஸ்திரக்காரர்கள் [சார்வாகமதஸ்தர்கள்] தர்மாதிகளையே ஒப்புவதில்லை. அவைகளை ஸாதிக்க வல்ல வேதத்தையும் ஒப்புவதில்லை என்று கூறுவதால் அவர்களும் ௸ தர்மாதர்மங்களையும் வேதத்தையும் ஒப்புமாறு செய்வோம்.

यस्य तौ नाभिमतौ नासौ समयी—समयप्रयोजनाभावात्।

அவர்கள் தர்மாதிகளை ஒப்பாவிடில் சாஸ்திரக்காரர்களேயல்லர்; [ஸித்தாந்தியேயல்லர்] சாஸ்திரம் என்றால் வேறு பிரமாணங்களால் ஸித்தமாகாத பதார்த்தத்தை விஷயமாகஉடையதும் அதைப் பயிலுபவர்கட்குப் பிரயோஜனத்தை யுண்டுபண்ணுவதுமான வாக்ய ஸமூஹாம்சம் நம்முடைய சாஸ்திரங்களுக்குத் தர்மாதிகள் விஷயம் என்றும் ஸ்வர்க்காதிகள் பிரயோஜனமென்றும் ஒப்புக் கொள்கிறோம். அவர்கள் தர்மாதிகளை அங்கீகாரம் செய்யாவிடில் சாஸ்திரத்துக்கு ஓர் விஷபமும்இல்லை பிரயோஜனமுமில்லையாதலால் அவர்களின் சாஸ்திரம் சாஸ்திரமேயன்று அவர்களும் ஸித்தாந்திகள் அல்லர்.

(தொடரும்)

M. ராமராவ்,
ஸ்ரீ மாத்வஸபையின் காரியதரிசி,
கும்பகோணம்.